DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.331/2026**

Prosecution witness **PW.2 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Subramani | Caste | : | |
| Father Name | : | Lakshmanan | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 52 |
| Time | : | | | | |

**(A1 to A4 absent. Petition filed and allowed for A1 to A4. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.07.2026**

**04.07.2026 முதல் விசாரணை** :

1. நான் அருவங்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்ட திரு.அர்ஜுணன் என்பவர் ஈட்டிய விடுப்பில் இருந்து வருவதால் அவர் புலன் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை பார்வையிட்டு அவரது கையொப்பத்தை தெரிந்துகொண்டு அவருக்காகவும் ஆவணங்களை பார்த்து சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 28.02.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் விஷ்வநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது இரவு 10.00 மணிக்கு உதகை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 பிரகாஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து அன்றைய தினமே அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.18/2026 பிரிவுகள் 115(2), 296(b) of BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்)** முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் இதர நகல்களை உயர்

அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரியான அர்ஜுணன் என்பவரது பார்வைக்கு வைத்துள்ளார்.

3. அன்றைய தினமே வழக்கு கோப்பை மேற்படி உதவி ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்தோஷ் , சூரஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும்,. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். )**

4. பின்னிட்டு சாட்சிகள் பிரகாஷ், விக்னேஷ், ஆனந்த் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவரவே 10.03.2026 ம் தேதி 14.00 மணிக்கு அருவங்காடு பஜாரில் வைத்து எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தகுந்த விசாரணைக்கு பிறகு நிலைய பிணையில் விடுவித்துள்ளார்,

5. அன்றைய தினமே வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.விஷ்வநாதன் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 16.03.2026 ம் தேதி அ.சா.1 க்கு சிகிச்சையளித்த உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் அதுல்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்துள்ளார். **(அ.சா.1 ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது )**

6. உதவி ஆய்வளார் தனது விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரியவரவே புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 115(2), 296(b) of BNS ன் கீழ் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :–

அன்றைய புலன் விசாரணை அதிகாரி பொய்யான புகாரின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற

இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரி கைது செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.